**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.STC.902/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | அஜந்தா | Prosecution | |
| Father Name | க/பெ. அருண்குமார் | Defence | DW1 |
| Village | கொள்ளிடம் | Taluk | சீர்காழி |
| Calling | | Age | 42/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day
**11.07.2025**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**எதிரி தரப்பில் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் எதிரி ஆவேன். இந்த வழக்கின் வாதி என்னுடைய குடும்ப நண்பர் ஆவார். கடந்த 2022 ஆம் வருடத்தில் நான் என்னுடைய குடும்ப செலவிற்காக வாதியின் மனைவியிடம் ரூ.7,00,000/- கடன் வாங்கினேன். இரண்டு மாதங்களில் அதனை திரும்ப கொடுப்பதாக கூறியிருந்தேன் ஆனால் என்னால் அவ்வாறு கொடுக்க முடியவில்லை. அதற்காக வாதி என் வீட்டிற்கு வந்து பிரச்சனை செய்தார். ஆகவே நான் அந்த கடனை கொஞ்சம் கொஞ்சமாக தீர்த்து விடுவதாக சொல்லி இருந்தேன். வாதி என்னிடம் அவ்வாறு பணத்தை வங்கி மூலமாக தன்னுடைய மகன் சுதர்சனின் வங்கி கணக்கிருக்கு அனுப்புங்கள் என்று சொல்லி அந்த வங்கி கணக்கு எண்ணை கொடுத்தார். அதன்படி என்னுடைய கணவர் அருண்குமார் என்பவரின் இந்தியன் வங்கி கணக்கிலிருந்து, 23.06.2023 அன்று இரண்டு தவணைகளில் தலா ரூ.50,000/- என மொத்தம் ரூ.1,00,000/- பணம் அனுப்பினோம். அவ்வாறு நாங்கள் சிறிது சிறிதாக பணத்தை திரும்ப கொடுத்த நிலையிலும், எங்களுக்கு மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இடமிருந்து அழைப்பானை வந்தது. அதன் பேரில் நான் அங்கு ஆஜரானேன்.

அந்த விசாரணையில் நாங்கள் பணம் செலுத்தியது பற்றி கூறினோம். அதற்கு அவர்கள், பாக்கி தொகையை நாங்கள் 2 மாதத்திற்குள் செலுத்த வேண்டும் என்று சொல்லி எழுதி வாங்கிக் கொண்டார்கள். பின்னிட்டு 16.08.2023 தேதியன்று

ரூ.1,00,000/- ரொக்கப் பணமாக நாங்கள் வாதியிடம் கொடுத்து அதனை போலீசார் எழுதி வாங்கிக் கொண்டார்கள். அதன் பிறகு 08.08.2023ல் போலீசார் முன்னிலையில் மேலும் ரூ.50,000/- கொடுத்து அதனையும் அவர்கள் எழுதி வாங்கிக் கொண்டார்கள். மீதி தொகையை கொடுக்க நாங்கள் 3 மாதகாலம் அவகாசம் கோரினோம். ஆனால் அதற்குப் பிறகு ஒரு வாரத்தில் எங்களுக்கு இந்த வழக்கு சம்பந்தப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வந்தது. அதற்கு நாங்கள் முறைப்படி பதில் கொடுத்துள்ளோம். மேற்சொன்ன வகையில் நாங்கள் 3 லட்சம் வாதிக்கு செலுத்தி விட்டோம். மீதி தொகை கொடுக்க நாங்கள் மூன்று மாத காலம் அவகாசம் கோரி இருந்தோம். பின்னிட்டு 23.12.2023 தேதியன்று நான் வாதியின் வீட்டிற்கு நேரடியாக சென்று அவரிடம் மீதி ரூ.3,00,000/- பணத்தை செலுத்தி விட்டேன். அவ்வாறு பணத்தை செலுத்தி விட்டு நான் என் காசோலைகளை திரும்ப கேட்டபோது அவர் தேடி எடுத்து தருவதாக சொன்னார். ஆனால் தற்போது வரை அதனை கொடுக்காமல், பின்னிட்டு அதனை வைத்து இந்த பொய் வழக்கை தாக்கல் செய்து விட்டார். நடந்தது இதுதான். இது முழுக்க முழுக்க பொய் வழக்கு ஆகும். நான் நிரபராதி ஆவேன். என்னை இந்த வழக்கில் இருந்து விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.